வயலென்றும் மேடென்றும் இனம் பிரித்து
வக்கணையாய் பெண் கொடுக்க மறுத்ததினால்
முறைமாமன் செயல் தன்னைத்தான் எதிர்த்து
முடிவு செய்தான் இளம்வேங்கை லிங்கையன்

ஊராட்சிக்கோட்டை கல்லை உடைத்தெடுத்து
ஊரெல்லாம் நீர் பாய வாய்க்கால் தந்தான்
வளைந்தோடும் வாய்க்காலை வெட்டி வைத்து
வாழை கரும்பு மஞ்சள் சோலை செய்தான்

எண்ணூறு ஆண்டுகட்கு முன்னமேயே - நதி
இணைப்புத் திட்டம் கொண்டு வந்த மன்னவனை
தெய்வமெனப் போற்றிடுவோம் வாரீர்! வாரீர்!!
தீந்தமிழால் கவிதை செய்தோம் கேளீர்! கேளீர்!!

(கவிதை : திரு. தாமரைத் தூரன்)